## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் – பிஏசிஎல் லிமிடெட் நிறுவனம் சார்பாக

**பின்னணி:**

1. பிஏசிஎல் லிமிடெட், (பிஏசிஎல்) பல்வேறு கூட்டு முதலீட்டுத் திட்டங்கள் (சிஐஎஸ்) மூலம் மொத்தமாக ரூ. 49000 கோடி (தோராயமாக) கடன் திரட்டியதாக கூறப்பட்டுள்ளது. ஆகஸ்டு 22, 2014 தேதியன்று செபி (SEBI) வெளியிட்ட ஆணையின்படி, பிஏசிஎல் நிறுவனத்தின் திட்டங்கள் சிஐஎஸ் (CIS) அடிப்படையிலானவை என்று தெரிவித்திருந்தது, இதற்கிடையே அவ்வாறு திரட்டிய பணத்தை சலுகை விதிமுறைகளுக்கு உட்பட்டு மூன்று மாத காலத்துக்குள் தன்னுடைய வாடிக்கையாளர்களுக்கு வட்டியுடன் திருப்பித் தரவேண்டும் எனத் தெரிவித்தது.

2. பிஏசிஎல் நிறுவனத்தின் ஆதரவாளர் / இயக்குநர்கள் கடன் பத்திரங்கள் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் (சாட்) மேல்முறையீடு செய்தனர், அங்கு அவர்களுடைய மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டு செபியின் ஆணை உறுதிப்படுத்தப்பட்டது. ஆகஸ்டு 14, 2015 அன்று வெளியிடப்பட்ட ஆணையினால் மிகுந்த மனவேதனைக்கு உள்ளானதால், தீர்ப்பாயத்தின் ஆணைக்கு ஆட்சேபம் தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

3. உச்சநீதிமன்றம் பிப்ரவரி 2, 2016 அன்று வெளியிட்ட ஒரு ஆணையின்படி பிஏசில் லிமிடெட் நிறுவனம் மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் ஆகியவற்றுக்கிடையிலான வழக்கிலும் (சிவில் மேல்முறையீட்டு எண் 13394/2015) மற்றும் இதர தொடர்புடைய வழக்குகளிலும், மரியாதைக்குரிய திரு. ஜஸ்டிஸ் (ஓய்வுபெற்றவர்), ஆர்.எம். லோதா (இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி) ஆகியோரின் தலைமையிலான ஒரு குழு அமைக்குமாறு கேட்டுக்கொண்டது, பிஏசிஎல் நிறுவனத்தின் பெயரிலுள்ள சொத்துக்களைப் பறிமுதல் செய்து விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு பிஏசிஎல் நிறுவனம் வாடிக்கையாளர்களிடம் வாங்கிய பணத்தைத் திருப்பித் தருவதற்கு அந்தக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

4. அதன்படி, பிஏசிஎல் லிமிடெட் நிறுவனத்தின் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்துள்ள பிஏசிஎல் வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய முதலீட்டின் உண்மைத்தன்மையைச் சரிபார்த்த பிறகு அவர்களுடைய பணத்தைத் திருப்பித் தருவதற்காக சொத்துக்களை விற்கும் நடைமுறையைத் தொடங்குவதற்கு சிபிஐ-யிடமிருந்து பிஏசிஎல் நிறுவனத்தின் சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களைச் சேகரிக்கும் நடைமுறையை அந்தக் குழு தொடங்கியுள்ளது. இதற்கிடையில், பொது அறிவிப்பு வாயிலாக பிஏசிஎல் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அறிவுறுத்தப்படுவது என்னவெனில்:

   (i) இது தொடர்பாக குழுவிடமிருந்து மேற்கொண்டு தகவல் கிடைக்கப்பெறும் வரை பிஏசிஎல் லிமிடெட் நிறுவனத்தின் திட்டங்களில் செய்துள்ள முதலீடுகள் தொடர்பான பதிவேடுகளை / ஆவணங்களை பிஏசிஎல் லிமிடெட்

நிறுவனத்திடமோ அல்லது வேறொரு நபரிடமோ கொடுக்கக் கூடாது மற்றும் / அல்லது பகிர்ந்துகொள்ளக் கூடாது; மற்றும்

(ii) புதிதாக முதலீடு எதுவும் செய்ய வேண்டாம் அல்லது தவணை எதுவும் செலுத்த வேண்டாம் அல்லது பிஏசிஎல் லிமிடெட் நிறுவனத்துக்கு அல்லது அதன் அதிகாரிகள் / முகவர்கள் போன்றோருக்கு பணம் எதுவும் கொடுக்க வேண்டாம்.

1. நான் ஒரு பிஏசிஎல் (PACL) வாடிக்கையாளர். நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்: 05.03.2016 அன்று வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, பிஏசிஎல் வாடிக்கையாளர்கள் அசல் ஆவணங்களை தங்களிடம் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிஏசிஎல் வாடிக்கையாளர்களிடமிருந்து கோரிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கும்போதும் குழுவின் மூலம் குறிப்பிட்ட அறிவிப்பு மீதான இதே தகவல், அமைக்கப்பட்ட குழுவின் மூலமோ அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரியின் மூலமோ தெரிவிக்கப்படலாம். முதலீட்டுப் பணத்தை திரும்பப் பெறுவதற்கான கோரிக்கையின்போது அசல் ஆவணங்களைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும், அவ்வாறு சமர்ப்பிக்காவிட்டால் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கை நிராகரிக்கப்படும்.

2. பணம் திரும்பப் பெறுவதற்கான எனது விண்ணப்பப் படிவத்தை நான் எங்கு அனுப்ப வேண்டும்?

பதில்: பிஏசிஎல் வாடிக்கையாளர்களிடமிருந்து கோரிக்கையை (கோரிக்கைகளை) பெறுவது குறித்து பிஏசிஎல் வாடிக்கையாளர்களுக்கு விளம்பரம் / பொது அறிவிப்பு போன்றவற்றின் வாயிலாக செபி / குழு தகவல் தெரிவிக்கும். அத்தகைய விளம்பரம் / பொது அறிவிப்பு வரும் வரை, வாடிக்கையாளர்கள் அனைத்து அசல் ஆவணங்களையும் தங்களிடமே வைத்திருக்குமாறும், அதை வேறொரு நபரிடமோ அல்லது முகவர் போன்றோரிடமோ பகிர்ந்துகொள்ளவோ, பரிமாற்றம் செய்யவோ, ஒப்படைக்கவோ வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3. பணம் திரும்பப் பெறுவதற்கான எனது விண்ணப்பப் படிவத்தை நான் எப்பொழுது, எங்கு அனுப்ப வேண்டும்?

பதில்: குறிப்பிட்ட அறிவிப்பு வரும்போது, பணம் திரும்பப் பெறுவதற்கான விண்ணப்பத்தை (AfR) அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு தேவையான ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து, அந்த விளம்பரத்தில் / பொது அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள / குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் / அதிகாரியிடம் சமர்ப்பிக்குமாறு பிஏசிஎல் வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4. பிஏசிஎல் லிமிடெட் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடமிருந்து செபி எப்பொழுது கோரிக்கைகளுக்கான அழைப்பு விடுக்கும்?

பதில்: பிஏசிஎல் நிறுவனத்தின் சொத்துக்களை விற்பனை செய்து போதுமான அளவுக்கு தொகை திரட்டப்பட்ட பிறகு பிஏசிஎல் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடமிருந்து பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கைகள் அழைக்கப்படும். குழுவால் தீர்மானிக்கப்பட்ட வடிவமைப்பில் முதலீட்டுப் பணத்தை திரும்பப் பெறுவதற்காக விண்ணப்பிக்குமாறு வாடிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும்.

5. எனது திட்டத்துக்கான முதிர்வுத் தேதி ஏற்கனவே கடந்துவிட்டது, எனது முதலீட்டுக்கான மாற்று வழிகளை / திட்டங்களை வழங்குவதற்கு பிஏசிஎல் முகவர்கள் தயாராக இருக்கின்றனர். தயவுசெய்து கூறுங்கள், நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்: அசல் ஆவணங்களை உங்களிடமே வைத்திருக்குமாறும், கேட்கப்படும்போது பணம் திரும்பப் பெறுவதற்கான படிவத்துடன் சேர்த்து அதைச் சமர்ப்பிக்குமாறும் நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். பிஏசிஎல் நிறுவனம் அல்லது அதன் முகவர்கள் ஆகியோர் உள்ளிட்ட எந்த நபரிடமிருந்தும், உங்களுடைய தற்போதைய முதலீடுகளை அவர்களுடைய இதர திட்டங்களுக்கு மாற்றியமைப்பதற்கு அல்லது மாற்றிக்கொள்வதற்கு விடுக்கப்படும் எந்த ஒரு அழுத்தங்களுக்கும் நீங்கள் அடிபணிந்து விட வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம். பிஏசிஎல் நிறுவனத்தின் சொத்துக்களை விற்பனை செய்த பிறகு பிஏசிஎல் லிமிடெட் நிறுவனத்தின் உண்மையான முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுப் பணத்தைத் திருப்பித் தருவதற்கு உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலே தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு மாறாக எந்த ஒரு நபரும் மேற்கொள்ளும் எந்த ஒரு முயற்சியும் உச்ச நீதிமன்ற ஆணையை மீறுவதாகும், எனவே அவ்வாறு செய்வது உசிதமல்ல.

6. இதற்கிடையில் நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்: செபியால் / குழுவால் வெளியிடப்படும் செய்தி வெளியீடு / விளம்பரம் போன்றவற்றுக்காக செய்தித்தாள்களை நீங்கள் தொடர்ந்து பார்த்து வர வேண்டும். www.sebi.gov.in என்ற செபியின் இணையதளத்தையும் நீங்கள் பார்க்கலாம் அல்லது 1800 266 7575 அல்லது 1800 22 7575 என்ற கட்டணமில்லா உதவித் தொலைபேசி இணைப்பு வாயிலாகவும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.